**செய்தி அறிவிக்கை எண் : 12 / 2019**
**விளம்பர எண் : 541**

## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் துறைத் தேர்வுகள் - மே 2019

**அறிவிக்கை**

**2019-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெறவிருக்கும் துறைத்தேர்வுகளுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்படும் கையால் எழுதப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட அல்லது அச்சுபிரதி எடுக்கப்பட்ட அல்லது ஒளிநகல் எடுக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. விண்ணப்பத்திற்கான கட்டணம் செலுத்தியிருந்தாலும் அவை நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| தேர்வின் பெயர் | : துறைத் தேர்வுகள் - மே - 2019 |
| அறிவிக்கை நாள் | : **07.03.2019** |
| முடிவு நேரம் மற்றும் நாள் | : **06.04.2019** & 11.59 பி.ப. |
| தேர்வு நடைபெறும் தேதிகள் | : 24.05.2019 முதல் 31.05.2019 வரை (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட்பட) |
| தேர்வு கட்டணம் | : பதிவு கட்டணமாக ரூ.30/-ம், ஒவ்வொரு தேர்விற்கும் தேர்வு கட்டணம் ரூ.200/-ம் சேர்த்து **இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். செலுத்துச்சீட்டு (Challan) மூலம் செலுத்தப்படும் கட்டணங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது / ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** |

**பொதுவான விவரங்கள்:**

1. துறைத் தேர்வுகள் மே - 2019 திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறையில் அரசாணை எண்.33, ப.ம.நி.சீர்திருத்த (எம்) த்துறை, நாள் 02.03.2017-ன்படி நடைபெறும்.

2. **சமூக நலத்துறைக்கான 5 புதிய துறைத்தேர்வுகள், அரசாணை எண்.144, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறை, நாள் 26.10.2018-ன் படி நடைபெறும்.**

3. விண்ணப்பங்கள் தேர்வாணைய இணையதளம் www.tnpsc.gov.in மூலமாக மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு தேர்விற்கும் ரூ.200/- தேர்வுக் கட்டணமாகவும், பதிவுக்கட்டணமாக ரூ30/-ம் சேர்த்து **இணையவழி செலுத்தும் முறையில் அதாவது இணையவங்கி, பற்று அட்டை /கடன் அட்டை முறை** ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முறையில் மட்டுமே தேர்வு கட்டணத்தை செலுத்தலாம். **செலுத்துச்சீட்டு (Challan) மூலம் செலுத்தப்படும் கட்டணங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது./ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

5. துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் **அண்மையில் எடுக்கப்பட்ட (மூன்று மாதங்களுக்கு மிகாமல்)** பாஸ்போர்ட் அளவிலான **நீலம் அல்லது வெள்ளை நிற பின்புலம் கொண்ட தெளிவான நிழற்படத்தை** கொண்டு ஆன்லைன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

6. நிழற்படத்தின் அளவு 30kb - 40kb மற்றும் 165 x 125 pixels–அளவிலும் மற்றும் கையொப்பம் 20kb - 30kb மற்றும் 80 x 125 pixels– அளவிலும் நல்ல தரத்துடன் இருத்தல் வேண்டும்.

7. தற்படம்/போலராய்டு நிழற்படங்கள் கொண்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்காணும் அறிவுரைகளை பின்பற்றாத அல்லது தெளிவான நிழற்படம் கொண்டு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. நிழற்படம் மற்றும் கையெப்பத்தினை ஆன்லைன் விண்ணப்பத்தில் அதற்கான கட்டங்களில் முறையே பதிவேற்றம் செய்ய வேண்டும்.

9. முற்பகல் தேர்வு காலை 9.30 மணிக்கும் பிற்பகல் தேர்வு மதியம் 2.30 மணிக்கும் தொடங்கும்.

10. **விண்ணப்பதாரர்கள் முற்பகல் தேர்வுக்கு காலை 9.00 மணிக்கும் பிற்பகல் தேர்வுக்கு மதியம் 2.00 மணிக்கும் தேர்வுகூடத்திற்குள் வருகை புரிய வேண்டும். தேர்வுகள் தொடங்கிய பின்னர் வரும் விண்ணப்பதாரர்கள் அதாவது முற்பகல் 9.30 மணிக்கு பிறகும் மற்றும் பிற்பகல் 2.30 மணிக்கு பிறகும் எவரும் தேர்வுக்கூடத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

11. **விண்ணப்பதாரருடைய அனைத்து விவரங்களும் அடங்கிய தனித்துவமான தன் விவர பட்டை தாளுடன் கூடிய விரிவான விடை எழுதும் விடைத்தாள் வழங்கப்படும்.**

12. விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை குறிப்பிட்டு தேர்வாணைய இணையதளத்தில் தங்களது நுழைவுச்சீட்டினை 17.05.2019 முதல் 31.05.2019 வரை பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம்.

13. துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான குறிப்பு மற்றும் விதிமுறைகள், திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறை, தேர்வின் பெயர்/தேர்வுக்குறியீடு/ தேர்வுகளுக்கான கட்டணம், துறைத்தேர்வுகள் - மே 2019-க்கான கால அட்டவணை, துறைத்தேர்வுகள் எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான திருத்தப்பட்ட விதிமுறைகள் ஆகியவை முறையே பிற்சேர்க்கை I, II, III, IV மற்றும் V எனும் கீழ்க்காணும் விவரங்களை தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in -ல் காணலாம்.

இணைப்பு - I - துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான திருத்தப்பட்ட குறிப்பு மற்றும் விதிமுறைகள்
இணைப்பு - II - திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறை
இணைப்பு - III - தேர்வின் பெயர்/ தேர்வுக்குறியீடு/ தேர்வுகளுக்கான கட்டணம்
இணைப்பு - IV - துறைத்தேர்வுகள் -மே 2019-க்கான கால அட்டவணை
இணைப்பு - V - துறைத்தேர்வுகள் எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான திருத்தப்பட்ட விதிமுறைகள்

14. தேர்வுகளின் முடிவினைத் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in வாயிலாகவும் அறியலாம். தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள், பெயர், முகவரி ஆகியவை அடங்கிய முழுவிவரப்பட்டியல் 07.08.2019 மற்றும் 16.08.2019 ஆகிய நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டில் வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகளை உரிய தொகையினைச் செலுத்தி "எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், வெளியீட்டுக் கிடங்கு, அண்ணா சாலை, சென்னை-600 002" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட மைய நூலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகள் தேர்வாணைய அலுவலகத்திலிருந்து வழங்கப்படமாட்டாது.

தொலைபேசி : 044 – 25300300
நிகரி : 044 – 25300598
இணையதளம்: www.tnpsc.gov.in

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

மின்னஞ்சல் : coetnpsc.tn@nic.in
Toll Free No. : 1800 425 1002